DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 474/2024

Miscellaneous :

Sessions : PW 7

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | பிரதாப் |
| Father / Husband Name | சரவணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மாங்கால் கூட்ரோட்டில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சாட்சி பெருமாள் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் இரண்டு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள அசா7 ன் முதலாவது கையொப்பங்கள் அசாஆ 7 முதல் அ.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 01.07.2024 ம் தேதி மாலை 5.00 மணிக்கு மதுராந்தகத்தில் இருந்து உத்திரமேரூர் வழியாக என் வீட்டிற்கு செல்லும்போது கருங்குழி சாய்பாபா கோவில் அருகே செல்லும்போது போலிசார் அந்த இடத்தில் கும்பலாக இருந்தார்கள், நான் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி விஜயபாரதியை போலிசார் விசாரித்தபோது எதிரி விஜயபாரதி போன், கத்தி, பைக், செயின் ஆகியவற்றை போலிசாரிடம் கொடுத்தார், அதற்கு நானும் பெருமாளும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் போன் மூலம் தகவல் சொன்னார்கள். யுகேஷ்குமார், ஆகாஷ் ஆகியோர்களை எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். அங்கே எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 20 பேர் இருந்தார்கள். கருங்குழி சாய்பாபா கோவில் அருகில் வைத்துதான் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். கருங்குழியும் மேலவளம்பேட்டையும் வேறு வேறு கிராமம் என்றால் எனக்கு தெரியாது. கருங்குழியில் இருந்து உத்திரமேரூருக்கு சாலை வசதியே இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் போலிசார் கேட்டதால் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். நான் மொத்தம் மூன்று கையொப்பம் செய்தேன். அந்த கையொப்பம் எத்தனை மணிக்கு போட்டேன் என்றால் மாலை சுமார் 7.00 மணியிருக்கும். மூன்று கையொப்பதையும் அங்கு வைத்து தான் போட்டேன்.

3. நான் தற்போது நீதிமன்றத்தில் செய்துகாட்டும் கையொப்பமும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பமும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பமும் தற்போது நீதிமன்றத்தில் செய்துகாட்டும் கையொப்பமும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது எதிரி என்ன நிற உடை அணிந்திருந்தார் என்றால் ஒரு வருடம் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகமில்லை. நான் சம்பவயிடத்திலேயே இல்லை என்றாலும், யுகேஷ் என்னுடைய உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கருங்குழியில் போலிசார் விசாரணையே செய்யவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 474/2024

Miscellaneous :

Sessions : PW 8

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | மணிகண்டன் |
| Father / Husband Name | கர்ணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டலம் கிராமத்தில் வசித்து மாலை கடையில் வேலை செய்து வருகிறேன். சாட்சி சூர்யாவை தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் ஒரு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அசா8 ன் முதலாவது கையொப்பங்கள் அசாஆ 10 மற்றும் அ.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 02.07.2024 ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும் சூரியாவும் வேலை முடித்துவிட்டு செங்கல்பட்டில் இருந்து மதுராந்தகம் வரும்வழியில் மேட்டுப்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகே ஆஜர் எதிரி சந்திரசேகரை போலிசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எங்கள் முன்னிலையில் போலிசாரிடம் கொடுத்தார்கள், அதற்கு சாட்சியாக நானும் சூர்யாவும் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** நான் சம்பவயிடம் வந்தபோது அங்கு சுமார் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் அங்கு யாருமே இல்லை, நாங்கள் மட்டும் தான் இருந்தோம். என்னை விசாரணை செய்த அதிகார் யார் என்று எனக்கு தெரியாது. போலிசார் கேட்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் மூன்று ஆவணங்களில் கையொப்பம் செய்தேன் என்றாலும், அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி என் முன்னிலையில் கத்தியை எடுத்து கொடுத்ததால் கையொப்பம் செய்தேன். எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் 5 முதல் 6.00 மணியளவில் கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது எதிரி என்ன நிற உடை அணிந்திருந்தார் என்றால் வெள்ளை நிற சட்டை மற்றும் கட்டம்போட்ட லுங்கி அணிந்திருந்தார். நான் சொல்வதுபோல் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும், நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு போலிசார் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 474/2024

Miscellaneous :

Sessions : PW 9

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சூரியா |
| Father / Husband Name | செல்வம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டலம் கிராமத்தில் வசித்து பூக்கடையில் வேலை செய்து வருகிறேன். சாட்சி மணிகண்டன் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் ஒரு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அசா9 ன் இரண்டாவது கையொப்பங்கள் அசாஆ12 மற்றும் அ.சா.ஆ13 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 02.07.2024 ம் தேதி மாலை 5.00 முதல் 5.30 மணியளவில் நானும் மணிகண்டனும் வேலை முடித்துவிட்டு செங்கல்பட்டில் இருந்து மதுராந்தகம் வரும்வழியில் மேட்டுப்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகே ஆஜர் எதிரி சந்திரசேகரை போலிசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எங்கள் முன்னிலையில் போலிசாரிடம் கொடுத்தார்கள், அதற்கு சாட்சியாக நானும் மணிகண்டனும் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் சம்பவயிடம் வந்தபோது அங்கு சுமார் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் அங்கு 4 முதல் 5 நபர்கள் இருந்தார்கள். போலிசார் கேட்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது எதிரி என்ன நிற உடை அணிந்திருந்தார் என்றால் சட்டை மற்றும் லுங்கி அணிந்திருந்தார். அந்த உடையின் நிறம் ஞாபகமில்லை. எதிரி கொடுத்த கத்தியின் அளவு என்ன என்று ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. ஆனால் அரை அடி அளவு கத்தியை எதிரி எடுத்துக்கொடுத்தார். நான் கையொப்பம் போட்ட ஆவணத்தில் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன அளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் சொன்ன நேரத்தில் எதிரியும் நானும் அங்கு இல்லை என்றால் சரியல்ல.